# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2018/11 - 2017 මැයි මස 09 වැනි අඟහරුවාදා - 2017.05.09

*2018/11 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 31 (ஈ) பிரிவுக்கு அமைய நிறுவப்பட்ட கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியத்திலிருந்து வெகுமதி வழங்குவதற்கான வழிமுறை மற்றும் ஆலோசனை***

*1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 31 (ஈ) (1) பிரிவின் கீழ் "கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியம்" எனும் பெயரில் நிதியம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியத்துக்கு வைப்பிடப்படும் தொகையில் வெகுமதி வழங்குவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்படும் வழிமுறை மற்றும் ஆலோசனைக்கமைய சம்பந்தப்பட்ட வெகுமதித் தொகை வழங்கப்பட வேண்டுமென இத்தால் அறியத் தருகிறேன்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*மஹவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர்.*

*2017, ஏப்பிறல் 26.*

***அட்டவணை***

*1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 31 (ஈ) பிரிவுக்கு அமைய நிறுவப்பட்ட கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியத்திலிருந்து வெகுமதி வழங்குவதற்கான தகைமைக்கு தகுதியுடையவர்களை நிச்சயப்படுத்துவதற்கான வழிமுறை.*

*1.* ***வெகுமதி பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடைய நபர்கள்.***

(i) *பொலிஸ் அலுவலர்.*

*(குறித்த சந்தேக நபரை கைது செய்வதற்கு மற்றும் நீதிமன்றத்துக்கு ஆஜரப்படுத்தும் பொலிஸ் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட வழக்கு நடவடிக்கை மேற்கொள்ளும் மற்றும் சாட்சிகளை வழங்கும் பொலிஸ் அலுவலர்).*

(ii) *கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தில் சேவையாற்றும் அலுவலர் :*

*(சம்பந்தப்பட்ட அனுமதியற்ற நடவடிக்கை சம்பந்தமாக பொலிஸுக்கு முறைப்பாடு கொடுப்பவர், சம்பந்தப்பட்ட வழக்கு நடவடிக்கை சாட்சிகளை வழங்குபவர் மற்றும் சம்பந்தப்பட்ட வழக்கு நடவடிக்கைக்கு நீதிமன்ற திணைக்களத்துக்காக விடயங்களை கவனிக்கும் அலுவலர்).*


1A - PG 3525 — 507 (2017/05)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(iii) நீதிமன்றத்துக்கு வழக்கு நடவடிக்கையில் செயற்படுவதற்காக சந்தேக நபர்களை கைது செய்யும் நடவடிக்கைக்கு அல்லது வழக்கு நடவடிக்கை சாட்சிகளை வழங்கும் ஏனைய அரச அலுவலர்கள்.

(iv) சம்பந்தப்பட்ட அனுமதியற்ற செயற்பாடுகள் சம்பந்தமாக தகவல்களை வழங்கும் ஆளொருவர்.

2. **நிதியத்துக்கு வரவு வைக்கப்படும் தொகையை ஒதுக்குவது சம்பந்தமான விடயம்.**

| | |
|---|---|
| ➢ ஒருங்கிணைந்த நிதியத்துக்கு | 40% |
| ➢ வெகுமதிக்கு | 50% |
| ➢ ஏனைய செலவினங்கள் | 10% |

(ஏனைய செலவினங்களுக்கு ஒதுக்கும் தொகையில் 5% நிதியத்தில் நிர்வாக நடவடிக்கைக்கு எஞ்சிய 5% கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் சகல அலுவலர்களின் நலன்புரி நடவடிக்கைக்கு ஒதுக்குதல் வேண்டும்).

➢ நலன்புரி நடவடிக்கைக்கு ஒதுக்கப்படும் 5% பெறுமதியில் வருடாந்தம் நலன்புரி நடவடிக்கைக்கு செலவிடக்கூடிய உச்ச தொகை ரூபா ஒரு இலட்சம் (1,000,000/-) ரூபா.

➢ வெகுமதிக்கு ஒதுக்கப்படும் தொகை ஒரு நபருக்கு உச்ச அளவில் 50,000 ரூபா ரீதியாக வெகுமதித் தொகை வழங்கிய பின் யாதேனும் தொகை மீதமானால் அத்தொகையில் அரைவாசி வருடாந்தம் ஒருங்கிணைந்த தொகையுடன் வரவு வைத்தல் வேண்டும்.

➢ யாதேனும் வருடத்துக்கு நலன்புரிக்காக ஒதுக்கப்படும் 5% அளவு 1,000,000/- ரூபா நலன்புரிக்கு ஒதுக்கிய பின் யாதேனும் தொகை மீதமானால் அத்தொகை ஒருங்கிணைந்த தொகையுடன் வரவு வைத்தல் வேண்டும்.

3. **வெகுமதி வழங்குவதற்கு பொருத்தமுடைய மற்றும் நிறைவு செய்ய வேண்டிய தகைமைகள்.**

(i) யாதேனும் வெகுமதி வழங்குவதற்கு முன்னர் இந்த விடய வழக்கிற்கு சம்பந்தப்பட்ட தண்டப்பணம் அல்லது சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் கைப்பற்றப்பட்ட பொருட்கள் விடுவிப்பதற்கு பெறப்படும் சகல தொகையும் கரையோர பாதுகாப்பு வெகுமதி நிதியத்துக்கு வரவிடப்பட வேண்டும் ;

(ii) யாதேனும் வழக்கு நடவடிக்கைகளுக்கு உதவி செய்யும் பொலிஸ் அதிகாரிக்கு அல்லது அரச அலுவலருக்கு ஒரு வழக்கு சம்பந்தப்பட்ட செலுத்த வேண்டிய உச்ச வெகுமதித் தொகை ஐம்பதாயிரம் (50,000/-) ரூபா ;

(iii) வெகுமதி வழங்குவதற்கு முன் அந்த கைது செய்யப்பட்ட மற்றும் வழக்கு நடவடிக்கைக்கு உதவி செய்த பொலிஸ் அலுவலரின் பெயர்ப்பட்டியல் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியின் கையெழுத்துடன் அனுப்புதல் வேண்டும். சம்பந்தப்பட்ட தவறுகள் சம்பந்தமாக பொலிஸுக்கு முறைப்பாடு செய்த மற்றும் தகவல் வழங்கியவரின் பெயர் பட்டியலும் வழக்கு நடவடிக்கைக்கு கலந்து கொண்ட மற்றும் சாட்சி வழங்குவதற்கு பங்கேற்ற கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அலுவலரின் மற்றும் ஏனைய அலுவலர்களின் பெயர்ப் பட்டியல் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி மற்றும் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**4. வெகுமதிக்கு பணம் செலுத்த வேண்டிய முறை :**

(i) வெகுமதிக்கு ஒதுக்கப்படும் நூற்றுக்கு ஐம்பது வீத (50%) தொகையில் பின்வருமாறு கொடுப்பனவு செய்தல் வேண்டும் ;

| தொ. இல. | விபரம் | பொலிஸ் அலுவலருக்கு | கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அலுவலர்/ஏனைய அரச அலுவலர்களுக்கு | தகவல் வழங்கும் நபருக்கு |
|---|---|---|---|---|
| (அ) | கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அலுவலரின் முறைப்பாடு அல்லது வழக்கு நடவடிக்கைக்கு கலந்து கொள்ளும் அல்லது வேறு கலந்து கொள்பவர் வேறு யாருமின்றி பொலிஸ் அலுவலரினால் மட்டும் சம்பந்தப்பட்ட நடவடிக்கைக்கு கலந்து கொள்ளும் போது | 100% | இல்லை | இல்லை |
| (ஆ) | கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அலுவலரின் முறைப்பாட்டின் பேரில் பொலிஸ் அலுவலரினால் சம்பந்தப்பட்டவரை கைது செய்வதை மேற்கொள்ளும் போது மற்றும் அந்த வழக்கு நடவடிக்கைக்க அமரும் அல்லது சாட்சி சொல்வதற்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அலுவலர் கலந்து கொள்ளாத போது | 70% | 30% | இல்லை |
| (இ) | கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அலுவலரின் முறைப்பாட்டின் பேரில் பொலிஸ் அலுவலரினால் சம்பந்தப்பட்ட கைது செய்வதற்கு மேற்கொள்ளும் நீதிமன்ற வழக்கு தொடரும் போது அந்த வழக்குக்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அலுவலர் அல்லது நீதிபதி திணைக்களத்தின் அலுவலர் வழக்குக்கு அமர்ந்து விடயத்தை கவனித்தால் மற்றும் அல்லது நீதிமன்றத்துக்கு சாட்சி சொல்வதற்கு அரச அலுவலர் கலந்து கொள்ளும் போது | 50% | 50% | இல்லை |
| (ஈ) | பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் தகவலின் பேரில் பொலிஸ் அலுவலரினால் சம்பந்தப்பட்ட கைது செய்வதற்கு மேற்கொள்ளும் போது (வேறு யாதேனும் அரச அலுவலரின் பங்களிப்பு இல்லாத போது) | 80% | இல்லை | 20% |
| (உ) | பொது மக்களிடமிருந்து கிடைக்கும் தகவலின் பேரில் பொலிஸ் அலுவலரினால் சம்பந்தப்பட்ட கைது செய்வதற்கு மேற்கொள்ளும் போது மற்றும் சம்பந்தப்பட்ட வழக்கு சம்பந்தமாக வேறு அரச அலுவலரின் சாட்சி/ பங்களிப்பு வழங்கும் போது | 50% | 30% | 20% |

(ii) பொலிஸ் அலுவலருக்கு வெகுமதிக்காக ஒதுக்கப்படும் பணம் வழக்கு நடவடிக்கைக்கு கலந்து கொள்ளும் சகல பொலிஸ் அலுவலருக்கு மட்டும் சமமான பகுதி பகிர்ந்தளிக்கப்படுவதுடன், சம்பந்தப்பட்ட வெகுமதி கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அலுவலருக்கு வழங்குதல் வேண்டும்.

(iii) சம்பந்தப்பட்ட வழக்கு நடவடிக்கைக்கு கலந்து கொள்ளும் மற்றும் முறைப்பாடு கொடுக்கும் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அலுவலருக்கு மற்றும் இதற்கு கலந்து கொள்ளும் ஏனைய அரச அலுவலர்களுக்கு வெகுமதிக்காக ஒதுக்கப்படும் தொகையில் சமமான பகுதி இந்த அலுவலருக்கும் வழங்குதல் வேண்டும்.

5. **கொடுப்பனவு விடயத்துக்கான விதிமுறைகள் :**

(i) வெகுமதிக்காக வழங்கும் பாதியளவு வருடாந்தம் மேற்கொள்ள வேண்டும் ;

(ii) வெகுமதி வழங்குவதற்கு தகைமை பெற்ற குறைந்த பட்ச தண்டப் பணம் ஐந்தாயிரம் (5,000/- ) ரூபாவாகும்.

*05-703*